செய்தி வெளியீடு எண்:418 நாள் : 19.08.2015

# செய்தி வெளியீடு

பொதுத்(தேர்தல்கள்—1)துறை

W.P.(Civil) No.494/2012 என்ற வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பின் அடிப்படையில், தற்போது தேசிய அளவில் வாக்காளர் பட்டியல்களைச் செம்மைப்படுத்தி விவரங்களை உறுதிப்படுத்தும் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்த வாக்காளர் பட்டியலுடன் ஆதார் எண்களை இணைக்கும் பணிகளை மீண்டும் ஆணைகள் பெறப்படும்வரை உடனடியாக நிறுத்திவைக்கும்படி இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. அதாவது, வாக்காளர்களிடமிருந்த ஆதார் விவரங்களைப் பெறுதல், வாக்காளர் பட்டியல் விவரங்களோடு இணைத்தல் போன்ற எந்தப் பணிகளையும் எந்தவொரு தேர்தல் அதிகாரியும் இனிமேல் மேற்கொள்ளக்கூடாது. இது தொடர்பாக ஒரு செய்தி வெளியீடும் வெளியிடப்பட்டது. எனினும், சில பத்திரிக்கைகளில் இது தெளிவாகச் சொல்லப்படாமல் வேறுவிதமாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

2. தேசிய அளவில் வாக்காளர் பட்டியல்களைச் செம்மைப்படுத்தி விவரங்களை உறுதிப்படுத்தும் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்த வாக்காளர் பட்டியலுடன் ஆதார் எண்களை இணைக்கும் பணிகளை மீண்டும் ஆணைகள் பெறப்படும்வரை உடனடியாக நிறுத்திவைக்கும்படி இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது என்பது மீண்டும் வலியுறுத்திக் கூறப்படுகிறது. மேற்கூறப்பட்ட வழக்கானது உச்சநீதிமன்றத்தின் ‘‘அதிக நீதிபதிகளைக் கொண்ட அமர்வில் முடிவு செய்யப்பட்டு இறுதித் தீர்ப்பு வழங்கப்படும்’’ என்று மேற்சொல்லப்பட்ட இடைக்காலத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கு குறித்து இந்திய தேர்தல் ஆணையத்திடமிருந்து பெறப்படும் அறிவுரைகளின்படி மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தலைமைத் தேர்தல் அதிகாரி,**
**தமிழ்நாடு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**